| அ.வ.எண் | 395/2012 |
|---|---|
| பெயர் | பழனியப்பன் |
| தந்தை பெயர் | குப்பண்ணன் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 22.10.2019 |

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனார் பெயர் குப்பண்ணக்கவுண்டர். தாயார் பெயர் அய்யம்மாள். என்னுடைய பெற்றோர்களுக்கு அம்மாசி, சின்னபொண்ணு, வையாபுரி, பழனியப்பன், மைலி ஆகிய 5 வாரிசுகள். என்னுடைய தகப்பனார் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். தாயார் இறந்து 6 வருடங்களுக்கும் மேல் இருக்கும். என் உடன்பிறந்தவர்களில் அம்மாசி என்பவர் இறந்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் வழக்கு தாக்கல் செய்து 10 நாட்களில் இறந்துவிட்டார். அம்மாசி எந்த தேதி, மாதம், வருடத்தில் இறந்தார் என்பதை என்னால் கூற முடியாது என்றால் ஆமாம். எந்த தேதியில் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் 6 வருடம் இருக்கும். 23.11.2012 ல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் மொத்தத்தில் 6 வருடம் இருக்கும். என்னுடைய சகோதரி அம்மாசி 14.10.2012 ல் இறந்துவிட்டதாக வழக்குரையில் திருத்தப்பட்டது என்றால் ஆமாம். வழக்குரையில் 23.11.2012 ல் நான் வழக்கு தாக்கல் செய்யும் போது அம்மாசி உயிரோடு இருந்ததாகவும், அவர்மீது சேர்த்து பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் உயிரோடு இருக்கும் போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு இறந்துவிட்டார். நான் கூறுவது பொய் எனவும், வழக்குரை தயார் செய்ததாக கூறும் 23.11.2012 க்கு ஒரு மாதத்திற்கு முன்பே இறந்துவிட்டார் எனவும் அதை தெரிந்து கொண்டேதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அம்மாசி இறந்ததற்கு பின்னிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**